செய்தி வெளியீடு எண்:037 நாள் : 16.01.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 13.1.2016 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியின் (Tamilnadu Mercantile Bank) மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.எச்.எஸ். உபேந்திரா காமத் அவர்கள் 2 கோடி ரூபாய்.

2. சுஸ்லான் எனெர்ஜி லிமிடெட் (Suzlon Energy Limited) நிறுவனத்தின் தலைவர் திரு. என். ரமணி அவர்கள் 1 கோடி ரூபாய்.

3. குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. பி. வரதராஜன் அவர்கள் 26 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 3 கோடியே 26 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 13.1.2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 310 கோடியே 82 லட்சத்து 37 ஆயிரத்து 499 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 16.1.2016